# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,179—1962 ජුනි 22 වැනි සිකුරාදා—1962.6.22

13,179 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு யூன் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 389 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 387 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


குறிப்பு :—1962 ம் ஆண்டின் விவசாயக் குடிமதிப்பு விதிகள் அநுபந்தமாக இவ் வெளியீட்டின் பகுதி I—தொகுதி I இல் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

பிரிவு 2 (1) இன் கீழான கட்டளை

1958 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தினாலும் 1961 ம் ஆண்டின் 61 ம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தியமைக்கப்பட்டுள்ள 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்கு உரிமையாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு காணி விவசாய நீர்ப்பாசன மின்சார அமைச்சர் சாள்ஸ் பேர்சிவல் த சில்வா ஆகிய நான் இக்கட்டளை மூலம் 1962 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் தேதியை முதற் கூறப்பட்ட சட்டத்தின் (பிரிவு 1, பிரிவு 2, பிரிவு 4 இன் உட்பிரிவுகள் (5) (6) (7) (8) (9) என்பன பிரிவு 21, பிரிவு 59, பிரிவு 60, பிரிவு 61, பிரிவு 63, பிரிவு 8, பிரிவு 53 என்பனவற்றின் ஏற்பாடுகள் தவிர்ந்த) ஏற்பாடுகள் அநுராதபுரம், புத்தளம், மட்டக்களப்பு மாத்தளை ஆகிய பரிபாலன மாவட்டங்களுள் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக நியமிக்கிறேன்.

சி. பீ. த சில்வா,
காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர்.

கொழும்பு,
962 ம் ஆண்டு யூன் மீ 14 ந உ.

6—906

---

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூன் மீ 10 ந் உ.

ரி. பி. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

அட்டவணை

| கட்டளை யிட்டதிகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 5.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) கொழும்பு மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 12.3.62 ந் திகதியை கொண்ட 12,983 ம் இலக்க. |
| 5.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) காலி மாவட்டம் | ஆட்டிறைச்சி .. | 12.3.62 ந் திகதியை கொண்ட 12,983 ம் இலக்க. |
| 5.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) காலி மாவட்டம் | மாட்டிறைச்சி .. | 12.3.62 ந் திகதியை கொண்ட 12,983 ம் இலக்க. |
| 6.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) களுத்துறை மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 12.3.62 ந் திகதியைக் கொண்ட 12,983 ம் இலக்க. |
| 5.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) களுத்துறை மாவட்டம் | மீன்கருவாடும் இருல் கருவாடும் .. | 12.3.62 ந் திகதியை கொண்ட 12,983 ம் இலக்க. |
| 6.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) மாத்தளை மாவட்டம் | மீன்கருவாடும் இருல் கருவாடும் .. | 12.3.62 ந் திகதியை கொண்ட 12,983 ம் இலக்க. |
| 15.3.62 .. | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | சர்க்கரை .. .. | 16.3.62 ந் திகதியை கொண்ட 12,988 ம் இலக்க. |
| 7.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) நுவரெலியா மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 17.3.62 ந் திகதியை கொண்ட 12,989 ம் இலக்க. |
| 7.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) இரத்தினபுரி மாவட்டம் | மீன்கருவாடும் இருல் கருவாடும் .. | 17.3.62 ந் திகதியை கொண்ட 12,989 ம் இலக்க. |

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 16.3.62 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) கண்டி மாவட்டமும், நுவரெலியா மாவட்டத்தின் உடஹேவகட்ட பெரும் பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியும் | சர்க்கரை .. | 20.3.62 ந் திகதியை கொண்ட 12,990 ம் இலக்க. |
| 13.3.62 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) மன்னார் மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 20.3.62 ந் திகதியை கொண்ட 12,990 ம் இலக்க. |
| 16.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யாழ்ப்பாண மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் சர்க்கரை .. | 20.3.62 ந் திகதியை கொண்ட 12,990 ம் இலக்க. |
| 16.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பதுளை மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச்சீனியும் பளுப்புச் சீனியும் | 24.3.62 ந் திகதியை கொண்ட 12,995 ம் இலக்க. |
| 23.3.62 .. | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | மீன்கருவாடும் இறால் கருவாடும் .. | 23.3.62 ந் திகதியை கொண்ட 12,994 ம் இலக்க. |
| ஷை .. | ஷை .. | உப உணவுப் பொருட்கள் .. | 23.3.62 ந் திகதியை கொண்ட 12,994 ம் இலக்க. |
| 2.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) அம்பாந்தோட்டை மாவட்டம் | மீன்கருவாடும் இறால் கருவாடும் .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 1.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) காலி மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 28.2.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) வவுனியா மாவட்டம் | ஷை .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 28.2.62 .. | ஷை .. | உப உணவுப் பொருட்கள் .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 2.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பதுளை மாவட்டம் | ஷை .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 2.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பொலனறுகல மாவட்டம் | ஷை .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 24.2.62 .. | பிரிதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பொலன்னறுவ மாவட்டம் | ஷை .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 24.2.62 .. | ஷை .. | ஷை .. | 7.3.62 ந் திகதியைக் கொண்ட 12,976 ம் இலக்க. |
| 16.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) மொனறுகல மாவட்டம் | சீனி (பளுப்பும் சுத்திகரிக்கப்பட்ட வெள்ளையும்) | 24.3.62 ந் திகதியைக் கொண்ட 12,995 ம் இலக்க. |
| 20.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) இரத்தினபுரி மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 24.3.62 ந் திகதியைக் கொண்ட 12,995 ம் இலக்க. |
| 26.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) காலி மாவட்டம் | ஷை .. | 18.3.62 ந் திகதியைக் கொண்ட 12,999 ம் இலக்க. |
| 27.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) களுத்துறை மாவட்டம் | ஷை .. | 31.3.62 ந் திகதியைக் கொண்ட 13,004 ம் இலக்க. |
| 26.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) மாத்தளை மாவட்டம் | ஷை .. | 31.3.62 ந் திகதியைக் கொண்ட 13,004 ம் இலக்க. |
| 26.3.62 .. | உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) குருணாகல் மாவட்டம் | சர்க்கரை .. | 31.3.62 ந் திகதியைக் கொண்ட 13,004 ம் இலக்க. |

6—941

---

## இலங்கை அரசாங்க நடைமுறைக் கைநூலை திருத்தியமைத்தல் பற்றி பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் உப குழு

மந்திரி சபையினுல் ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தின்படி, அரசாங்க ஊழியர்களின் உரிமைகளையும் சேவை நிலைமைகளையும் கட்டுப்படுத்தும் அரசாங்க நடைமுறைக் கைநூலை பரிசோதித்து நிதி மந்திரியினூடாக அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்வதற்கென ஒரு உப குழு நியமிக்கப் பட்டுள்ளது.

2. அரசாங்க ஊழியர் தொழிற் சங்கங்களும், தனிப்பட்ட அரசாங்க ஊழியர்களும், வேறு யாரும் இக்குழுவுக்குத் தங்கள் அபிப்பிராயங்களை எழுத்தில் கீழ்க்காணும் விலாசத்திற்கு சமர்ப்பிக்கலாம் :—

காரியதரிசி,
அரசாங்கக் கைநூலைத் திருத்தி அமைக்கும் உப குழு,
மே/பா. பொருட் கொள்வனவுப் பகுதி காரியாலயம்,
தபால் பெட்டி இல. 147,
கொழும்பு.

3. எல்லா முறைப்பாடுகளும் 1962 ம் ஆண்டு யூலை மாசம் 2 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குமுன் காரியதரிசியிடம் வந்து சேரவேண்டும்.

கே. பி. றூப்பசிங்க,
காரியதரிசி,
அ... க் கைநூலைத் திருத்தி
...மைக்கும் உப குழு.

கொழும்பு,
1962 ம் ௵ யூன் ௴ 18 ந் உ.

6-1024.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## திரு. ஐ. என். டி. முனசிங்கவின் காணாமற்போன அதிகாரக்கடிதம் (அடையாளச்சீட்டு)

தொழிற் பகுதியின் தொழில் உத்தியோகத்தர் (இப்பொழுது உதவித் தொழில் அதிபர்) திரு. ஐ. என். டி. முனசிங்கவுக்கு, கீழ்க்கண்ட பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரக்கடிதம் (அடையாளச்சீட்டு) 1962 ம் ஆண்டு மே மாதம் 29 ந் தேதியன்று காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதென்று, இத்தால பொதுசனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அது எவரிடமாவது காண்பிக்கப்படின், எனக்கு அல்லது மிகக்கிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

மா. தொ. அ. கருணதிலக,
தொழில் அதிபருக்காக,

தொழிற் பகுதி,
1962 ம் ஆண்டு ஜூன் மீ 9 ந வ.

### மேற்கூறிய பத்திரம்

தொடர் இல : 252.

இதன்கீழ் காணப்படும் மாதிரிக் கையொப்பத்தை இட்டுள்ள திரு. ஐ. என். டி. முனசிங்க தொழிற் பகுதியின் ஒரு தொழில் உத்தியோகத்தராவர். இவருடைய புகைப்படம் இச்சீட்டிற் காணப்படுகிறது.

பின்வரும் தலங்களிற் பிரவேசித்து எக்கடமைகளை நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அக்கடமைகளை நிறைவேற்ற இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) சட்ட நிரூபணங்களின் 111 ம் 114 ம் அத்தியாயங்களுக்குட்பட்ட தோட்டங்கள் ;

(ஆ) 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டத்திற்குட்பட்ட சாய்ப்புகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், தோட்டங்கள் ஆகியவை ;

(இ) 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டத்திற்குட்பட்ட யாதாயினும் ஒரு சாய்ப்பு அல்லது அலுவலகம் ;

(ஈ) 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்திற்குட்பட்ட வேலைத் தலங்கள்.

ஒப்பம் : சா. ப. குமாரசிங்க,
பதிற் தொழில் அதிபர்,
1958 ம் ஆண்டு நவெம்பர் மீ 18 ந வ.

ஒப்பமிடப்பட்டது : ஐ. என். டி. முனசிங்க,
மாதிரி ஒப்பம்.

6—866

---

## இலங்கை சேமிப்பு வங்கி

### சேமிப்பாளர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

இலங்கை சேமிப்பு வங்கி சேமிப்பாளர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 1962 ம் ஆண்டு ஜூன் மீ 29 ந் திகதி காலை 9.15 க்கு இலங்கை சேமிப்பு வங்கியில் நடைபெறும்.

எஸ். டி. எஸ். தேனுவற,
தற்காலிக முகாமையாளர்.

இலங்கை சேமிப்பு வங்கி,
எச்செலன் ஸ்குயர்,
கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூன் மீ 15 ந வ.

6—932

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது